அரியலூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் – திரு.மு.இராமன்,எம்.எஸ்.சி., எம்.எட்., அவர்கள்,
நி.மு.எண். 00010/அ1/2022, நாள். 14.02.2022.

-------

பொருள்– பள்ளிக் கல்வித்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பணிவரன்முறை – அரியலூர் மாவட்டம் – திருமழப்பாடி அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.இரா.சுரேஷ்மோகன் என்பாருக்கு – இளநிலை உதவியாளர் பணிநிலையில் – 21.09.2020 முற்பகல் முதல் – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை– 1. அரசாணை (நிலை) எண்.101, பள்ளிக் கல்வி (வசெ.1)த்துறை, நாள்.18.05.2018
2. திருமழப்பாடி, அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் ந.க.எண். 190/2021, நாள். 31.12.2021.

-----

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டு, அரியலூர் மாவட்டம், திருமழப்பாடி அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பார்வை 2–ன்படி, பணி நியமனம் பெற்று, 21.09.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.இரா.சுரேஷ்மோகன் என்பாருக்கு, இளநிலை உதவியாளர் பணிநிலையில் 21.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கக் கோரி பார்வை 2–ன்படி கருத்துருக்கள் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டது. அதனடிப்படையில், கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்படுத்தி தனியருக்கு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

<u>ஆணை:</u>

தனியர் திரு.இரா.சுரேஷ்மோகன் என்பார் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நேரடி நியமனம் பெற்றவர் என்பதினால், தனியருக்கு, தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகளின் தொகுதி 14–ல் வகைப்படுத்தப்பட்டுள்ள, இளநிலை உதவியாளர் பணிநிலையில் 21.09.2020முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:</u>

01. அன்னார் தமது இளநிலை உதவியாளர் பணிநிலையில், மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவ காலத்தினை மேலலுவலருக்கு மனநிறைவு அளிக்கத் தக்க வகையில் முடிக்கப்படல் வேண்டும்.
02. அரசு அலுவலர்களுக்கான பவானி சாகர் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும்.
03. தகுதிகாண் பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்ச்சி பெறல் வேண்டும்.
04. தகுதிகாண் பருவம் முடித்த பின்னரே இரண்டாவது ஊதிய உயர்வு மற்றும் வருடாந்திர ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்பட வேண்டும்.

/த.பி.பா/

மேலும், இது சார்பான விவரங்களை தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு – பணிவரன்முறை ஆணை அசல் –02 மற்றும்
அசல் பணிப்பதிவேடு 01 பவுண்டு தொகுதி

14/2/2022

முதன்மைக் கல்வி அலுவலர் ,
அரியலூர்.

14/2/22

பெறுநர்

1. திரு.இரா.சுரேஷ்மோகன்,
இளநிலை உதவியாளர்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
திருமழப்பாடி, அரியலூர் மாவட்டம். (உரிய தலைமை ஆசிரியர் மூலமாக)

2. தலைமை ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, திருமழப்பாடி, அரியலூர் மாவட்டம்.